Register as a N
ewspaper Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமா

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வரு ஐப்பசிமீ கருஉ. (1943 நவம்பர்மீ 1 திங்கட்கிழமை) [இல. ருஎ

## நம்பிக்கை மோசடி வழக்கு

### யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவர்மீது 'சம்மன்ஸ்'

யாழ்ப்பாணம் அக் 29—

யாழ்ப்பாணம் பட்டினசபைத் தலைவர் திரு. கே. ஜயரத்தினம் சென்ற ஜூலை மாதம் 3-ந் திகதிக்கும் ஆகஸ்ட் 19-ந் திகதிக்குமிடையே பட்டினசபைத் தலைவர் என்ற முறையில் அவருக்கு அளிக்கப்பட்ட 1000 ரூபாவை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தற்காலிக நீதிபதி திரு. ஏ. சம்பந்தம் அவர்கள் முன்னிலையில் யாழ்ப்பாணப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் இன்று வழக்குத் தொடர்ந்தார்.

யாழ்ப்பாண முற்றவெளியில் பட்டினசபைப் பூந்தோட்டமொன்றை அமைக்கும் பொருட்டுத் தான் அளிக்க முன்வந்த நன்கொடை ரூ. 2500-ல் ஒரு பாகமாக டாக்டர் சுப்பிரமணியம் பட்டினசபைத்தலைவர் பெயருக்கு அளித்த 1000 ரூபாய்ச் 'செக்'கை எதிரி துஷ்பிரயோகஞ் செய்ததாகக் கூறப்பட்டது.

### டாக்டர் சுப்பிரமணியத்தின் சாட்சியம்

டாக்டர் சுப்பிரமணியம் சாக்ஷியக் கூண்டிலிருந்து சொன்னதாவது:-

சென்றவருட நவம்பர் மாதத்தில் எதிரி என்னைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் பூந்தோட்டமொன்று அமைக்க நான் ரூபாய் 2,500 நன்கொடையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அத்தொகையை இரண்டு மூன்று தவணைகளில் நன்கொடையாகக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். 'பார்க்' அமைக்க ஒரு 'செக்' அனுப்பும்படி எதிரி சென்ற நவம்பரில் ஒரு கடிதம் எழுதினார். அம்மாதம் 12ம் திகதியன்று நான் பட்டினசபைத் தலைவர் பெயருக்கு 1,000 ரூபாய் 'செக்' ஒன்று அனுப்பினேன். அதற்கு ஒரு பற்றுச்சீட்டு வந்ததென்று நினைக்கிறேன்.

அதன்பிறகு, சென்ற ஜூலையில எதிரி, நன்கொடையின் மற்றப்பாகத்தையும் கொடுக்கும்படி எனக்கு டெலிபோன் செய்தார். அதன் பிறகு எதிரி என் வீட்டிற்கு வந்து நான் எப்படி அவருடைய பெயரில் 1500 ரூபாய்க்குச் 'செக்' கொடுப்பதால், அதைச் சுலபமாக மாற்ற முடியுமென்று கூறினார். 1000 ரூபாயே கொடுக்கமுடியு மென்று கூறி எதிரியின் பெயருக்கு 1000 ரூபாய் 'செக்' ஒன்றுகொடுத்தேன். இதற்குப் பற்றுச்சீட்டு எனக்குக் கிடைக்கவில்லை. பற்றுச்சீட்டு வேண்டுமென்று பட்டினசபைத்தலைவருக்குக் கடிதம் எழுதினேன். பதில் கிடைக்கவில்லை.

சிறிது நாட்களுக்குப் பிறகு எதிரி என் வீட்டிற்கு வந்து நான் கொடுத்ததொகையைத் தன்னுடைய சொந்தச் செலவிற்கு உபயோகித்துக்கொண்டு விட்டதாகவும் விரைவில் அதைச் சபையின் கணக்கிற் கட்டி விடுவதாகவுங் கூறினார்.

டாக்டர். சுப்பிரமணியத்திற்குப் பிறகு பட்டினசபைக் காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியம் சாட்சியம் கொடுத்தார். 12ம் திகதியன்று கோட்டுக்கு வரும்படி எதிரிமீது நீதிபதி 'சம்மன்ஸ்' பிறப்பித்தார்.

## பண்ணைத் திட்டத்திற்கு எதிர்ப்பு

### பொக்கிஷக் காரியதரிசியின் கருத்து

யாழ்ப்பாணப் பட்டினத்தைச் சேர்ந்த பண்ணைக்கும் ஊர்காவற்றுறையிலுள்ள அல்லைப்பிட்டிக்குமிடையில் யாழ்ப்பாணப் பரவைக் கடலின் ஒருபகுதியில் ஒரு தாம்போதியை அமைக்க உத்தேசித்திருப்பதையொட்டி, பொக்கிஷக்காரியதரிசி சில ஆக்ஷேபனைகள் தெரிவித்திருக்கிறார்.

இப்பொழுது சாமான்கள் விற்கும் விலைகளையும் தொழிலாளரின் சம்பளங்களையும் அதிகாரிகள்நன்கு பரிசீலனை செய்தபின், குறித்த திட்டத்தின் செலவு ரூபா 6 லட்சமாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பொக்கிஷக்காரியதரிசி குறித்த திட்டம்பற்றி எழுதுவதாவது:—

இத்திட்டம்பற்றி முன்னர்ப் பல நிபுணர்கள் பரிசீலனை செய்ததிற் குறித்த ஸ்தலத்தில் ஜல ஓட்டத்தைத் தடுப்பதனால் ஆபத்தேற்படுமென்று அபிப்பிராயந் தெரிவிக்கின்றனர். எனவே, தாம்போதியை அமைப்பது நல்லதெனத் தெரியவில்லை. மத்தியில் விடவிருக்குமிடைவெளியிற் பாலமொன்றை அமைக்க முடியுமா என்பதற்கு இப்பொழுதும் போதிய நம்பிக்கை இல்லை.

"குறித்த வெளியில ஒரு படகுப் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படவேண்டியிருக்கும். திட்டத்திற்குச் செய்யப்படும் செலவுக்கேற்ற பலன் கிடைக்குமா என்பதுஞ் சந்தேகம்.

குறித்த திட்டத்தின் வேலையை நடத்துவதானால், நியாயமான விலைக்குச் சாமான்கள் கிடைக்கும்வரை அதைப்பின்போட்டு வைக்கவேண்டும். இப்பொழுது நெருக்கடி இருந்து வருவதால யுத்தத்திற்குப்பின் இவ்வேலையை ஆரம்பிக்கும் பட்சத்தில் அநேக தொழிலாளரின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துவிடும். பின்போட்டு வைக்கக்கூடிய பெரிய வேலைகளைப் பின்போட்டு வைப்பது இப்போது அவசியமாகும். மேலும், இப்பொழுது கையிருப்பிற் சொற்பமாகவுள்ள சாமான்களைப் பின்போட்டு வைக்கத் தகுந்த திட்டங்களிற் செலவு செய்யாதிருப்பது உசிதமாகும்.

## சீனி விலை

இன்று தொடக்கமாக, சீனி ஒரு இறுத்தல் 30 சத விகிதமாக விற்க வேண்டுமென பொருட் கட்டுப்பாட்டு அதிகாரிகள் விளம்பரஞ் செய்திருக்கிறார்கள்.

## வங்கமக்களுக்கு யாழ்ப்பாணத்தின் ஆதரவு

### நிதி திரட்டத் தீர்மானம்

யாழ்ப்பாணம், அக், 28—

யாழ்ப்பாண மக்களின் பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெற்றது. யாழ்ப்பாண உதவி மதகுருவான சங்கை ஜே. ஆர். நவரத்தினம் வங்காள நிவாரண நிதிக்கு ஆதரவளிக்கும்படி வற்புறுத்தி இக்கூட்டத்திற் பின்வரும் பிரேரணையைக் கொண்டுவந்தார்:—

யாழ்ப்பாணம் வங்காள நிவாரண நிதியொன்றை ஒழுங்கு செய்து மத்திய வங்காள நிவாரண நிதிக்கு நன்கொடைகளை அனுப்பவேண்டும்.

இத்தீர்மானம் நிறைவேறியது.

பின்னர், டக்டர். எஸ். சுப்பிரமணியத்தைத் தலைவராகவும், காதி எஸ். எம். அபூபக்கர், திருவாளர்கள் ஏ. ஆர். சுப்பிரமணியம், ஈ. எம். திருச்செல்வம், கே. நேசையா எல். ஆர். அழகரத்தினம் ஆகியோரை அங்கத்தினராகவுங்கொண்ட நிர்வாகசபையொன்று தெரிவு செய்யப்பட்டது.

திரு. ஜே. சுப்பிரமணியம் அந்நிதியின் பொக்கிஷதாராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## வங்கத்திற் பட்டினிக் குடும்பம் தற்கொலை

டாக்கா, அக், 28—

இந்நகரக் கிழக்குப் பகுதியில் வசித்த ஒரு மீன்வலைஞனும் அவன் மனைவியும் பெண் குழந்தையும் பட்டினிக் கொடுமையைச் சகிக்க முடியாமல் தற்கொலை செய்துகொள்ள முயன்றனர். மூவரும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு ஓடும் புகைரதத்தின்முன் விழுந்தனர். புருடனும் மனைவியும் புகைரதத்தில் அரைபுண்டு இறந்தனர். ஆயின், குழந்தை எப்படியோ தப்பிக்கொண்டது.

## பேதிக்குப் பலி

பரோடி பகுதியில் வசிக்கும் குடியானவர்களில் ஏராளமானவர்கள் பேதி நோய்க்குப் பலியானதாக டாக்கா வக்கீல ஒருவர் தெரிவிக்கிறார்.

## நெடுந்தீவில் ஓர் புதிய சைவப்பாடசாலை

சை. வி. சங்கத்தின் ஆதரவில், நெடுந்தீவைச் சார்ந்த நடுக்குறிச்சியில் உள்ள விநாயகர் ஆலயத்திற்குப் பக்கமாக நவராத்திரி வாரம் 8-10-43 வெள்ளிக்கிழமை மாலை, நெடுங்காலம் எதிர்பார்த்திருந்த ஓர் சைவப் பாடசாலை விஜயதசமியன்று தொடக்கப்பட்டது. பல சைவப் பிரமுகர்கள் சமுகங் கொடுத்தனர். வழக்கறிஞர் திரு. P. இரகுபதியவர்கள் காரியோஷத்தினிடையே மேற்படி பாடசாலையைத் திறந்து வைத்து ஆதரித்தார். இப்புதிய பாடசாலையில் சுமார் 40 மாணவர்கள் கற்கின்றனர்.

—நிருபர்

## "காந்திஜியே உலகில் உத்தமர்"

### அமெரிக்க நிருபர் கருத்து

பம்பாய், அக் 24

"ஜப்பான் அல்ல; சீனாவும் அல்ல; இந்தியாதான் எதிர்கால கிழக்கு ஆசியாவுக்கு வழிகாட்டியாக இருக்கும்" என்று அசோஷியேட்டட் பிரசுக்கு அளித்த பேட்டியில் மிஸ்டர் கார்ல்வான் வெய்காண்ட் கூறினார்.

மேற்படியார் அமெரிக்க ஹார்ஸ்ட் பத்திரிகைகளின் கிழக்குப் பிரதேச பிரதம நிருபர். இவருக்கு 69 வயதாகிறது. பழுத்த பத்திரிகைகாரர். கிழக்குப் பிரதேச விஷயங்களைப்பற்றிய நிபுணர்.

### ஜப்பானியர், சீனர், இந்தியர்

மிஸ்டர். வெய்காண்ட் தமது கருத்தை விவரிக்கையில் கூறியதாவது:-

ஜப்பானியர் எதையும் துரிதமாகச் செய்துவிடுவார்கள். ஆனால் தீர்க்காலோசனையுடன் செய்யமாட்டார்கள். சீனர் தீர்க்காலோசனை மிகுந்தவர்கள். ஆனால் எதையும் சாவதானமாகவே முடிவுசெய்வர். இந்தியரோ தீர்க்காலோசனையும் மிக்கவர்கள், துரிதமாகவும் முடிவு செய்பவர்கள்.

இன்னொருவிஷயமும் கவனிக்கத்தக்கது. சீனர் உலோகாயத உணர்ச்சி நிறைந்தவர்கள். இந்தியரோ பாரமார்த்திக மனோபாவம் நிரம்பியவர்கள். இது தான் நல்லது.

### மகாத்மாவுக்குப் பாராட்டு

உலகக் கல்ஞானம் செழிக்கவும், முன்னோக்கத்தில் திருஷ்டியுடைய சிந்தனை பெருகவும் இந்திய வெகுஜனம் உதவியிருக்கிறது. காந்திஜியின் சேவை சாமானியமானதல்ல.

அக்கிழவரை எனக்கு நேரில் தெரியும். உலகில் அவரைவிட உத்தமர் ஒருவரும் இல்லை.

## இரு பெரும் சேனைகளும் தொடர்ந்து முன்னேற்றம்

லண்டன், அக் 29

மொண்டிபல்கோன் நகரை நேசதேசப்படைகள் கைப்பற்றிக்கொண்டனவென்று அல்ஜியர்ஸ் ரேடியோ அறிவித்தது.

வட ஆபிரிக்காவில் வெளியிடப்பட்ட உத்தியோக அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:- "5-வது சேனை மேலும்முன்னேறிமற்றொரு முக்கிய குன்றைப் பலத்தபோராட்டத்துக்குப் பின்னர்ச் சுவீகரித்துக்கொண்டது. 8வது சேனை போராடும் அரங்கத்தில் சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது. மொண்டிபல்கோன் நகரை 8வது சேனை கைப்பற்றிக்கொண்டது; யுத்த அரங்கம் முழுவதிலும் இன்று பலத்தமழை பெய்தது.

மொலிஸே நகரை நேசப்படைகள் கைப்பற்றிக் கொண்டதாகவும் டியானோ என்ற ஜங்ஷனை இப்போது 5வது சேனை பயமுறுத்திக் கொண்டிருப்பதாகவும் வட ஆபிரிக்காவிலிருக்கும் ராய்ட்டரின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸு
ஐப்பசிமீ கடுஉ திங்கட்கிழமை

## தீமையிற் பிறந்த நன்மை

சேற்றிலே செந்தாமரை உற்பத்தியாதல்போல், தீமையிலிருந்து நன்மை பிறப்பதும் சிற்சில சமயங்களில் உண்டெனலாம். இற்றைக்குப் பதினைந்திற்கு மேற்பட்ட வருடங்கட்குமுன் இந்த நாட்டில் மதுபானத்தை யொழித்துவிடலாமென இங்குள்ள தேசாபிமானிகளும் சமயாபிமானிகளும் ஏனைய அபிமானிகளும் பட்ட சிரமமும் செலவிட்ட பொருளும் மிக அதிகமாகும். ஆனால் அந்தக் காலத்திலே அதிகாரிகள் வருவாயை யுத்தேசித்து மதுபானத்திற்குச் சார்பாய் நின்றமையினால் மேலே சொல்லப்பட்ட அபிமானிகள் எதிர்பார்த்திருந்த அளவிற்கு மதுபான நீக்கம் அநுகூலப்படவில்லை. அதனால், மதுபான விலக்குப் பிரசாரணரும், அந்நீக்கத்தின் பொருட்டு முயற்சி செய்தவர்களும் அலுத்து அந்நன்முயற்சியில தலையிடாதொழிந்தனர். அந்நியநாட்டுக் குடிவகைகளும் கள் சாராய மென்னும் இந்நாட்டு மதுபானங்களும், அதன்பின் தொற்றுநோய் பரவுவதுபோல், இந்நாட்டு மக்களிடையே பரவலாயின. சாராயத் தவறணைகள் பிரதானதெருக்களிற் குறித்த இடங்களிலும், கள்ளுக்கடை தெருக்கள் ஒழுங்கைகள் சந்திகள் முதலிய பல இடங்களிலும் முளைக்கலாயின. பின்னருஞ் சிலகாலஞ் செல்ல பனந்தோப்புகளிலும் தென்னந்தோப்புகளிலும் கள்ளுக்கொட்டில்கள் காணக்கிடப்பன. கள் சாராயங்களை முந்தி மறைவில் வைத்துக்குடித்தவர்கள்தாமும், இங்குள்ள சில 'டக்ரர்' மார் இக்குடிவகைகள் மனுஷனுக்கு உணவாகின்றன வென்று போதிக்கத் தலைப்பட்டமையினால், மறைந்து குடித்தலையின்றி வெளிப்படையாகக் குடிக்கத் தலைப்பட்டனர். இவ்வாறாக யுத்தம் ஏற்பட்டமையினால் உணவுப்பொருட் பஞ்சமுண்டாக, இங்குள்ள மதுபானிகளனைவரும் கள்ளே, சாராயமே சிறந்த உணவாகுமென்று சமாதானஞ் சொல்லிக்கொண்டு வரைவின்றிக் குடிக்கத் தலைப்பட்டனர். இக்காலத்திலே இந்த ஊரிலே ஒரு போத்தல பாலைக் கையிற் கொண்டு போவது கௌரவக்குறைவெனவும், ஒருபோத்தல் கள்ளைக் கையிற் கொண்டுசெல்லுதல் தம் கௌரவமெனவும் பலர் மதிக்கத்தொடங்கிக் கொண்டார்கள்.

சருமம் இப்படி நடைபெறுங் காலத்திலே, கள்ளு அதிகப்பட்டபோதும், யுத்தங் காரணமாகச் சாராயப்பஞ்சம் நேர்தலாயிற்று. இதனால் மதுபரிபாலனப் பகுதியார் சாராயத்தின் விலையை உயர்த்தி, சாராயத்தை இங்குள்ள மக்கள் வாங்கிக் குடிக்கும் விஷயத்திலும் கட்டுப்பாடு செய்யலாயினர். பிந்திய கட்டுப்பாட்டின்படி சாராயத்தவறணைகள் மாசத்திற் குறித்த சில தேதிகளிலேயே திறந்து விற்கப்படுதலும், ஒருவருக்கு இரண்டு போத்தல் சாராயமே ஒரே முறையிற் கொடுக்கப்படுதலுமாகிய சில முறைகள் கைக்கொளளப்படலாயின. தவறணைகளிற் சாராயம் விற்கப்படும் குறித்த தினங்களிற் கைக்கொரு போத்தலாகத் தனித்தனி இவ்விரு வெறும் போத்தல்களைப் பரித்தவர்களாய் நகர்ப்புறத்திருந்தும் நாட்டுப்புறத்திருந்தும் "நான் முந்தியோ, நீ முந்தியோ" என்று ஓடிப்போகும் பல்லாயிரக்கணக்கான சனங்களின்காட்சி பார்ப்பவர்க்கு வேடிக்கையாகவும் விந்தையாகவுமே யிருக்கும். இப்படியெல்லாரும் ஆங்காங்கே ஓடிப்போனாலும், மீண்டு வரும்போது சிலரினுஞ் சிலரே சாராயம் நிரம்பிய போத்தல்களோடு வர, பலர் தாம் கொண்டுபோன வெற்றுப் போத்தல்களோடு மீண்டு வரக் காணலாகும். நிரம்பிய போத்தல்களோடு மீண்டு வருபவர் எப்படிப்பட்டவரென அவதானிக்கப்புகின், அரோக திடகாத்திரராய், அடிக்கஞ்சாதவராய், போத்தலால் எறியுண்டு தேகத்தில ஊறுண்டாகும்போதும் அஞ்சாதவராய், பழிபாவங்கட்கு அஞ்சாதவராய், மரியாதைக்கஞ்சாதவராய், எவ்வகையான தீமைகளுக்கும் அஞ்சாதவராயுள்ளவர்களே எனபது புலப்படும். இந்தப் பிந்திய கட்டுப்பாடு, அப்படிக்கட்டுப்பாடு செய்தவரையும் அறியாமல வேறு ஒரு பெரிய தீமைக்குட் புகுதலாயிற்று. 3 ரூபா 40 சதமாகத் தாம் வாங்கிய ஒரு சாராயப் போத்தலை, அப்படி வாங்கியவர் இருமடங்கு மும்மடங்கு விலைக்குச் சோரமாக விற்க இக்கட்டுப்பாடு இடங்கொடுவிட்டது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து அதிகாரிகள் செய்த கட்டுப்பாடுகளில் இதுபோன்ற விபரீத புத்தியோடு செய்யப்பட்ட கட்டுப்பாடு வேறு எதுவும் இல்லையெனலாம்.

இச் சோர வியாபாரத்தை புணர்ந்து போலும் இப்பொழுது மதுபரிபாலனப் பகுதியார் சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த அரசினர் கஜெற் பத்திரிகையிற் பின்வருமாறு விளம்பரஞ் செய்துள்ளனர்:—

"இந்த நவம்பர்மீ 1௳ (இன்று) தொடக்கம் சாதாரண சாராயங்கொண்ட ஒரு போத்தல் 10 ரூபாவாகவும், திறமான சாராயம் ஒரு போத்தல் 11 ரூபாவாகவும், மிகத்திறமான சாராயம் போத்தல் 12 ரூபாவாகவும் விற்கப்படும். "கில்லறையில்" ஒரு "டிறம்" சாதாரண சாராயம் 75 சதமாகவும், திறமான சாராயம் 90 சதம் வரையிலும் விற்கப்படும்"

அதிகாரிகள் 3 ரூபா 40 சதமாக விலைப்பட்டுவந்த ஒரு போத்தல் சாராயத்தை 10 ரூபாவாக விலையேற்றியதற்குக் காரணம் இச்சாராயம் மலிவாக வாங்கி விலைகூட்டிச் சோரமாக விற்கப்படுகலைத் தடுத்தற்கென்றே சொல்லப்படுகிறது. இதனால் ஊரவர்கள் அடையக்கூடிய நன்மையென்னவெனில், இப்படி விலையேறிய சாராயத்தை அதிகபணம் கொடுத்துவாங்கிக் குடித்தல் இயலாதாக பல ஏழைமக்கள் சாராயங் குடியாதொழிவர்; சாராயமில்லாவிட்டாலும் கள்ளைக் குடிப்பார்கள்தாமே யெனின் கள் தீமையிற் குறைந்த தீமையென ஒருவாறு பொருந்தாச் சமாதானஞ் சொல்லுதலும் முடியும்; கட்குடிப்போர் தம் உழைப்பில ஒரு சிறு பாகமான பணத்தையாயினும் மனைவி மக்களுக்கு உணவின் பொருட்டு உதவுவர். சாராயங்குடிப்போர் அப்படிச் செய்தல் முடியாதென்று அக்குடிகாரரே சொல்லுகிறார்கள்; இதனாற்றான் இச்சாராய விலைக்கட்டுப்பாட்டைத் தீமையிற் பிறந்த நன்மையென்று சொல்லுகின்றோம்.

## கந்தசட்டி விரதம்

(கோழும்பு அருள்—தியாகராஜா)

கலியுக வரதராகிய ஸ்ரீ முருகப் பெருமானுக்குரிய விரத தினங்களுள் கந்தஷஷ்டி விரதம் தலைசிறந்ததாகும். இவ்விரதம் இவ்வருடத்தில் ஐப்பசிமீ 12௳ (29-10-43) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 17ம் திகதி புதன்கிழமை முடிவடைகிறது. 'இந்நாட்களில் யாம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று நம் பெரியோர்கள் கூறினர். அவர்தம் கூற்றை மூன்று வகைப்படுத்தலாம். அவர்கள் நம்மை, நல்லமனதுடன், நல்ல வாக்குடன், நல்லஉடம்புடன் இருக்குமாறு கட்டளை இட்டனர். தெளிவாகக் கூறல் வேண்டுமென்றால் நல்ல எண்ணங்களை எண்ணுதல், நல்ல சொற்களைச் சொல்லுதல், நல்ல செயல்களைச் செய்தல என்னலாம். இவற்றைக் கைக்கொள்ளின் அழியும் இவ்வுலகவாழ்வில் ஈடுபடுவோர் அழியாப் பேரின்ப வாழ்வை எய்துவர் என்று அவர் எண்ணினர். அவ்வாறு நடப்பின் இவ்வுலகவின்பம், சுவர்க்க இன்பம், வீட்டின்பம்என்பவற்றை முறையே எய்தித் துய்ப்போம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எம்மெல்லோருக்கும் அப்பெருமானிடத்தில் பயம் பக்தி இருத்தல்வேண்டும். பயபக்தியுடைய தேவர்கள் இன்பம் எய்தியதும் பயப்படுத்திய அசுரர் பயமின்றி அழிந்தொழிந்ததும் இந்த ஆறுநாட்களிலேதான்.'

ஆதலின் இவ் வாறு நாட்களும் சிறந்தன. இவை எல்லாரும் கைக்கொளற் குரியன. தேசம், மதம், காலம், நிலைமை முதலிய வேறுபாடுகளைக் கருதவேண்டுவதில்லை. வான்மீகி முனிவர் தம் இராமாயணத்தில் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாயிலாக "எவராயிருப்பினும்கார்த்திகேயனிடத்தில் பக்திபண்ணுபவர் புதலவன் முதலிய பல பேறுகளைப் பெறுவர்" என்றுசொல்லியிருப்பது கவனிக்கற் குரியது.

கலை நிறைந்த சீர் வள்ளலாகிய கண்ணப்ப நாயனார் பக்திக்கு எல்லை யென்று, அழுதடியடைந்த அன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளாலும், தேவார அருட்பாக்களை நாமுய்யும் பொருட்டு அருளிச் செய்த மூவராலும், மாயாவாதக் கொள்கையை நிறுவிய சங்கராச்சாரியராலும் ஒருங்கே போற்றிப் புகழப்பட்டவர். இக்கண்ணப்பர் திருவவதாரஞ் செய்தது முருகப்பெருமான் திருவருளினால் என்றால், அந்தக் குமரவேளின் பெருமை, ஒரு நாட் பிறந்து, சிலநாள் இருந்து ஒரு நாளில் இறக்கும் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய எம்மனோரின் சிந்தைக்கும் உணர்விற்கும் எட்டாததொன்றும்.

'சிவபெருமானைச் 'சதாசிவோம்!' என ஒருமுறை துதித்த வேதங் குமாரப் பெருமானைச் 'சுப்ரமண்யோம்!!!' என மும்முறை துதித்து அவரது அருட்பெருமையை விளக்கிற்று என்ப.'

இந்த ஆறுதினங்களிலும் யாம் ஓதிப் பயன்பெறக்கூடிய முக்கியமான நூல்கள் இரண்டு. ஒன்று கச்சியப்ப சிவாசாரியார் அருளிச் செய்ததும் சைவ முப்புராணங்களிலொன்றென்று சைவநன்மக்க ளெல்லோராலும் போற்றப் படுவதுமான கந்தபுராணம். மற்றது பன்னிரு திருமுறைகளிலுள்ள பாசுரங்களில் மிக்க தொன்மை வாய்ந்ததும் சங்க நூலாகிய 'பத்துப்பாட்டு' என்னும் நூலில் முன்னிற்பதுமான திருமுருகாற்றுப்படை. கந்தபுராண நூலை விதிப்படி அன்புடன் ஓதுகின்றவர்கள் அடையும் பயனைப் பின்வரும் செய்யுள் தெரிக்கின்றது.

"இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே"

இந் நூல் முருகப் பெருமானின் அவதாரத்தைப் பற்றியும், அவர் செய்தருளிய அற்புதத் திருவிளையாடல்களையும், 'மாயையின் வலியோனாகி மால் பிரமன் முதலியவர்களை வென்று ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செய்து 108 யுகத்திற்கும்காயமதழிவின்றித் தேவர்களை இடுக்கண் செய்த சூரன் முதலிய அசுரர்களை வீண்குடியேற்றிய தனையும், தெய்வயானை, வள்ளியம்மன் முதலிய கன்னியரைத் திருமணம் வேட்டதையும் பிறவற்றையும் தெளிவாகக் கூறுவது. இதன் செய்யுட்கள் பதினாயிரத்தின் மிக்கன. 'இது அறுமுகக் கடவுள் மகிமையெல்லாம் அங்கை நெல்லிக்கனி போல எடுத்து விரித்துரைக்குந் திவ்வியபுராணமாய், தமிழ்ப்பெருங் காப்பியமாய் நிலவுவது. இது நவிற்றுநம் நவிற்றுநம் நாநயம் பயப்பது. பயிற்றுநம் பயிற்றுநம் அறுமுகக் கடவுள் திருவடிப் பத்தி ஞானம் விளைப்பது'

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் பிரபல சைவப்பெரியார் தம் தந்தையார் இக் கந்தபுராணம் முழுவதையும் இந்த ஆறு நாட்களில படித்து முடிக்கும் நியமமுடையவ ரென்று எமக்குக் கூறியிருந்தார். இப்படிச் செய்து முடித்தல் எல்லோருக்கும் சாலாது. ஆயினும் கந்தபுராணத்திற்கு இருதய கமலம் போல விளங்கும் சூரபன்மன் வதைப்படலம் 501 செய்யுட்களையுடையது. இதனைச் சைவமக்களாயுள்ள எல்லோரும் இந்நாட்களில் சைவாலயங்களில் ஓதுதலவேண்டும். இப்படலத்திலே சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனுக்கு விசுவரூப தரிசனம் காட்டிய பாகம் (திருவிருத்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# இலங்கையில் பத்தினி வழிபாடு

கொட்டாஞ்சேனை—திரு. வை. முத்துக்குமாரசுவாமி எழுதியது

(முற்றொடர்)

வட இலங்கையில் விரோதய சிங்கையாரியன் காலத்திலே மன்னன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு ஊர்கள்தோறும் கோயில் அமைத்து விழாச் செய்தான் என்ப. யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் பத்துமைலுக்கப்பால், நாவற்குழிக்கு அணித்தாகவுள்ள வேலம்பரை என்னும் பதியில் உள்ள கண்ணகி கோவிலே முதன் முதல் கயவாகுவின் திருமுகத்தின்படி அமைக்கப்பட்டகோவில் என்ற கர்ணபரம்பரை வரலாற்றை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 'யாழ்ப்பாணச் சரித்திரத்திலே' குறிப்பிட்டிருக்கின்றார்.

அதற்குப்பின் கட்டப்பட்டவைகள் கவாலிப் பகுதியில் உள்ள கலையோடைப்பதி. மற்றது அங்கணைக் கடவை அல்லது அங்கணம்மைப்பதி. இது கயவாகுவால் அமைக்கப்பட்டது என்ப. அங்கணைக் கடவை கந்தரோடைக்கு அணித்தாக இருக்கிறது. அந்த அம்மன் கோவிலுக்குமுன் ஒரு பெரிய சிலை இருந்தது. அச்சிலையில் தலையும் கால்களும் ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் ஆனையால் முறிக்கப்பட்டது. அச்சிலையின் தலை யாழ்ப்பாண நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது கயவாகுவின் உருவமாய் இருக்கக்கூடும் என்று முதலியார் இராசநாயகம் கூறுவர்.

நயினாதீவு எனப்படும் மணி நாகதீபத்தில் உள்ள நாகபூஷணி அம்மன்கோவில கயவாகு காலத்தில் அமைக்கப்பட்ட கண்ணகிப் பத்தினி கோவிலாயிருத்தல் சாலும். தீவுப்பற்றில் காம்பன், புங்குடுதீவு, வேலணை, காரைநகர் முதலிய இடங்களிலும், கட்டுடை, சிராணி, மாசிப்பிட்டி, ஆலங்குழாய், கரவெட்டி, அல்வாய், ஆதனுளு, மாதனை, துனுவில், கேலம், சிமிழ், சுட்டிபுரம், போக்கட்டி, கச்சாய், செல்வியாதீவு, பொற்கடவை, மிருசுவில், காப்பகம், விளுபளை, புலோலியில் மாதனை, மயிலிட்டி, வீரமாணிக்கதேவன் துறை வராணியில சுட்டிபுரம், தெல்லிப்பழையில் தேதிரையில் (இராசராசேஸ்வரி கோயில்) நாகர்கோவில் முதலிய ஊர்கள்தோறும் கண்ணகி கோவில்கள் இருக்கின்றன.

மட்டுவிற் பதியில் உள்ள பன்றித் தலைச்சி அம்மன் கோவில் கண்ணகி கோவிலே. இப்பதிக்கு இப்பெயர் வந்த காரணம்பின்வருமாறு: பறங்கிக்காரர் காலத்திலே இந்த நாட்டிலுள்ள புலைஞர்கள் ஓர் இரவு ஒரு கமக்காரனுடைய பட்டியிற் புகுந்து கொழுப்பான ஒரு மாட்டை அவிழ்த்துக்கொண்டு இந்தச் சோலையில் வந்து கொலைசெய்து உரித்துத் தோலையும் தலையையும் அவ்விடத்தில் தாழ்த்துவிட்டு இறைச்சியைப் பங்கிட்டுக் கொண்டு போய் விட்டார்கள். விடிந்து கமக்காரன் மாட்டைக் காணாமல் அரச அதிகாரிகளுக்குத் தெரிவிக்க அவர்கள் தொடர்ந்து புலைஞர்கள் மனைகளில் இருப்பதைக் கண்டு குறிப்பாகச் சோலைக்குள் வந்து ஆராய்ந்து பார்க்கையில் புலைஞர்கள் அங்கு விற்றிருக்கும் கண்ணகி அம்மனை 'இந்த ஆபத்து நேரத்தில் தாயே காப்பாற்ற வேண்டும்' என்று நினைந்து நினைந்து வேண்டிக்கொண்டு நின்றார்கள். அதிகாரிகள் தோலும் தலையும் தாழ்த்த விடத்தில் தோண்டிப் பார்க்கும்பொழுது மாட்டுத் தலை பன்றித் தலைச்சியாகக் காணப்பட்டது. அன்றுதொடக்கம் பன்றித்தலைச்சி என்னும் பெயர் வழங்கலாயிற்று. இத்தப் புலைஞரின் சந்ததியார்களே இத்தலத்திலுள்ள சந்நிதானத்திலே வரிசைபாக தினமும் விசேஷ தினங்களில் கோவலன் கதை படிப்பதும், பறை சேவிப்பதுமாகிய தொண்டுகளை உதயந்தொடங்கி, அஸ்தமயனம் வரையும் இன்றைக்குஞ் செய்துகொண்டு வருவார்கள். என்றைக்கும் இந்த அம்மன் இவர்களுக்கு வேண்டிய அநுக்கிரகங்களைச் செய்து வருகிறார்.

வடமேற்குப் பகுதியில் வன்னி புதுக்குளம், வன்னி விளாங்குளம், முள்ளியபளை, பத்தினிப்பாய் (பூனே?) சாம்பற்றீவு (சல்லி) உடுப்பு (சலாபப்பகுதி) முதலிய இடங்களில் கண்ணகிக்குக் கோவில்கள் அமைக்கப்பட்டு பூசை, பொங்கல் முதலியன இன்றும் நடைபெறுகின்றன. மருதமடு என்னும் தலத்தில் கத்தோலிக்கர் தேவமாதாவின் சிலையை வைத்துப் பூசிக்க முன்னர் கண்ணகி கோவிலொன்று இருந்தது என்று வடமாகாண அதிபதி டைசனின் அறிக்கை (முதலியார் இராசநாயகம், யாழ்ப்பாணச் சரித்திரம், பிரிட்டிஷ் காலம் பார்க்க)யிலிருந்து அறியக்கிடக்கிறது.

கொழும்பிலிருந்து பத்துமைலுக்கு அப்பால் உள்ள கந்தானைக்கு அரை மைலுக்கப்பால், முத்துராசவெளி வயல்வெளிக்கு அணித்தாக கடற்கரைக்கண் நவடுபிட்டியா என்னும் ஊர் இருக்கிறது. இங்கு ஓர் பழையபத்தினி ஆலயம் காணப்படுகிறது. அத்தேவாலயத்துக் கப்பகனுரை (பத்தினிஹாமியை) விசாரித்தறிந்த அளவில், பத்தினி அம்மன் ஒரு நாவாயில் தோன்றி அற்புதங்கள் செய்து வருகிறார் என்றும், கயவாகு மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது இது என்றும் கூறினார். குருணாகலைப் பகுதியில், கட்டுகம்பலைப் பத்துவில் மினுவங்கொட, நீர்கொழும்பு முதலிய இடங்களில் ஒவ்வொரு பழைய இராசதானிகளிலும் அநுராசபுரத்தைவிடக் கண்ணகி பத்தினிகோவில்கள் உண்டு. பல கோவில்கள் சிங்கள இராணிகளால் அமைக்கப்பட்டன. டொண்ரா எனப்படும் தேவிநுவரையில் பழைய பத்தினி தேவாலயம் ஒன்றும் இருந்தது. கண்டிக்கு 4 மைலுக்கு அப்பால் உள்ள குண்டசாலய என்னும் இடத்திலும் ஹங்குரன் கெற்றவிலும் பழைய பத்தினிக் கோவில்கள் உள்ளன.

சில ஆண்டுகளுக்குமுன்னர்ப்பத்தினி அம்மன் சிலையொன்று லண்டன் மியூசியம் நூதனப் பொருட்சாலையிலிருந்து எடுப்பித்து இலங்கை நூதனப்பொருட்சாலையில் (இப்பொழுது இது பெல்மதுளையில உள்ளது) வைக்கப்பட்டது. அப்பத்தினி சிலை மெழுகால் அமைக்கப்பட்டது. திருகிய முலையுடன் காணப்படுகின்றது. இதுவே கயவாகு காலத்தில் அமைக்கப்பட்ட சிலையின் பிரதிச்சிலை.

தமிழர்களின் தனிச் சிறப்புப் பெருமை வாய்ந்த இளங்கோ வடிகள் செய்த சிலப்பதிகாரத்து முக்கிய பாத்திரமாகிய கண்ணகிப் பத்தினிவழிபாடும், மணிமேகலையின் முக்கிய பாத்திரமாகிய மணிமேகலை வழிபாடும் மகாபாரதத்தில் முக்கிய கதாநாயகியாகிய திரௌபதி வழிபாடும் பத்தினி தெய்வ வழிபாடாக ஒன்று கலந்து விளங்குகின்றது. பத்தினி வழிபாட்டை இலங்கையில் கொண்டுவந்து தாபித்தபொழுது, உரோமபுரியில் ஜூபிற்றர், ஜூனோ, மினேர்வா முதலிய கடவுளர்களை அக்காலத்து மக்கள் பூசித்து வந்தனர். கிரேக்க தேசத்தில் ஒருவகையான சக்தியாகிய பலஸ் அதினியைப் பூசித்தனர். யவனர்கள் அக்கடவுளர்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டனர். அவர்களின் வழிபாடும் மறைந்துவிட்டன. ஆயினும் அதே காலத்தில இலங்கையில உண்டான கண்ணகி வழிபாடு நம்நாட்டில் இன்னும் வேரூன்றி இருக்கிறது. எசலப் பெரஹராக்களில நடைபெறும் சிலம்பு வணக்கம், சிலம்பு ஒலித்தல், காலியில் நடைபெறும் கண்டிகடணம், மகாவலிகங்கைக் கரையில் நடைபெறும் தீர்த்தச் சடங்கு, பூ மிதித்தல், "அங்கெலிய" (இருமான் கொம்புகளை இழுத்தல்) "பொல்ஒருப்பொல்" (போர்த்தேங்காய்) ஆபரணம் சிலம்பு அணிதல் முதலிய பழைய சிங்களரின் விளையாட்டுக்களின் உற்பத்தியையும் மேலே கூறப்பட்டவையின் உற்பத்தியையும் ஆராயும் பொழுது இவை பத்தினி தெய்வத்துடன் தொடர்புள்ளனவாக அறியக்கிடக்கின்றன. தென் இந்தியாவில—கண்ணகி பிறந்த நாட்டில்—அப்பத்தினியின் வழிபாடு குன்றிவிட்டது. ஆயினும் நம் இலங்கையில பத்தினி வழிபாடு சுடர்விட்டெரிந்துகொண்டிருப்பது களிக்கற்குரியதும் வியக்கற்குரியதுமாகும். சிங்களர், தமிழராகிய இலங்கை மக்களுக்கும் இந்திய தமிழ்மக்களுக்கும் அடிப்படையான பண்பு ஒன்றெனபது வெள்ளிடைமலைபோல தெள்ளிதிற் புலனாகின்றதன்றோ?

## வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம்

நிகழும் சுபானு௵ ஐப்பசி௴ 8௳ (25-10-43) திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் ஷெ வித்தியாசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் ஷெ வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் நியாயதுரந்தரர் ஸ்ரீமாந் க. செ. சோமசேகரம் அவர்களின் தலைமையில் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயிற்று. பூர்வாங்க நிகழ்ச்சிகளுக்குப் பின் புதுவருட உத்தியோகத்தர், பின்வருவோர் தெரிந்து சபையோரால் அங்கீகரிக்கப்பெற்றனர். தலைவர்: நியாயதுரந்தரர் ஸ்ரீமாந் க. செ. சோமசேகரம் அவர்கள், உபதலைவர்கள்: நியாயதுரந்தரர் வை. சிவசுப்பிரமணியம், S. விஜயரத்தினம் எனுமிருவர், காரியதரிசகர்: தலைமையாசிரியர் வித்துவான் க. சுப்பையபிள்ளையவர்கள், நிருவாகசபை அங்கத்தவர்கள்: ஷெ வித்தியாசாலை ஆசிரியர்களாகிய ஸ்ரீமான்கள் சி. வைத்திலிங்கம், க. வை. ஆத்மநாதசர்மா, இ. பரஞ்சோதி, வி. சின்னையா, வை. சபாபதிப்பிள்ளை, ஸ்ரீமதி த. சுந்தரம் என்பவர்களும், ஸ்ரீமான்கள் இ. நடராசா, மு. சுப்பிரமணியம், க. பாலசுப்பிரமணியம், வை. இராமநாதன், இ. சிவலோகநாதன், சோ. இராமலிங்கம், ந. சரவணபவன், கா. இரகுநாதன் என்பவர்களுமாவர்.

முதலாவதாக மாணவிகைகள் ப. பரமேஸ்வரி, அ. விஜயராணி, க. சரஸ்வதி, க. வரதா, ப. விக்கினேஸ்வரி என்பவர்கள் ஸ்ரீகணநாதம் முதலிய 9 கீதங்களையும் தேவாரம் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் கேட்போர் மனமுருகும் வண்ணம் இன்னிசையோடு பழைய மாணவர் க. சண்முகநாதம், ந. தங்கராசா என்பவர்களின் பக்கவாத்திய சகிதமாகப் பாடினர். அதன்பின் ஷெ வித்தியாசாலை ஆசிரியர், பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள் யுத்தசகாயச் சேமநிதி விஷயமாக ஆக்கிக் கொடுத்த பாட்டை மாணவன் செ. சண்முகரத்தினம் திறம்பட இசையோடு பாடினன். பின், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர், மகோபாத்தியாய பிரம்மஸ்ரீ வை. இராமசாமி சர்மா அவர்கள் 'குருகுலவாசம்' என்னும் பொருள்பற்றிச் சிறந்தவொரு உபந்நியாசஞ் செய்தார்கள். அப்பொழுது, பெற்றார் தமது பிள்ளைகளுக்குக் கல்வி சம்பந்தமாகச் செய்யவேண்டியன இவையென்றும் மாணவர் ஆசிரியரோடு ஒழுக வேண்டிய முறைகளிவையென்றும், ஆசிரியரின் பொறுப்பு இவையென்றும் உதாரணங்களோடு நன்கு விளக்கப்பட்டன.

அப்பால், யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தலைவர், ஸ்ரீமாந் க. ஐயாத்துரை B SC அவர்கள் அவ்வாரத்துப் பிரதான நிகழ்ச்சியாகிய 'யுத்த சகாயநிதிச் சேமிப்பு இயக்கம்' என்னும் பொருள்பற்றி மிக்க தெளிவாக விஷயத்தை விளக்கி, அதன் வசியத்தையும் வற்புறுத்திக் கூறினார்கள். அதன்பின், ஷெ வித்தியாசாலைப் பழைய மாணவிகையும் இராமநாதக்கல்லூரி ஆசிரியையுமாகிய ஸ்ரீமதி த. மகேஸ்வரி B. A (தமிழில் விசேட சித்தியும் பெற்ற) அவர்கள், மாணவர் பெற்றார் கடமைகள் என்னும் பொருள்பற்றிச் சிறந்த ஒரு விரிவுரை நிகழ்த்தினார்கள். அப்பொழுது அவர் தமது ஆரம்பக்கல்விக்கு ஆதாரமாகவிருந்தது இவ்வித்தியாசாலையே யென்றும், இங்கு தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளையும் ஆரம்பமுதற்கொண்டு கற்பதற்கும், மாணவர்களின் ஒழுக்கமுறைகள் சமயக்கல்வி என்பவற்றைக் கற்பதற்கும் தகுந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பெற்றிருக்கிறார்களென்றும் இக்காலத்தில் இப்பாடசாலையிலிருந்து தமிழ் S. S. C பரீக்ஷைக்குத் தோற்றும் மாணவர் ஆங்கிலத்தை இங்கேயே ஆரம்பமுதற்கொண்டு கற்று உபபாடமாகப் படித்துச் சித்திபெறுகிறார்களென்றும் ஆறாம்வகுப்பு முதல்சம்ஸ்கிருதம் இங்குப் படிப்பிக்கப்படுகிறதென்றும் பெற்றாரும் மாணவரும் இவற்றை உணர்ந்து ஆதரித்து நடப்பார்களாக என்றும ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானது ஸ்தாபனமும் புகழும் என்றும் நின்று நிலவுக என்றுங் கூறி முடித்தார்கள். தலைவரது முடிவுரையுடனும் ஆசிரியர் வி. சின்னையா அவர்களது நன்றியுரையுடனும் கூட்டம் 7 மணியளவில் நிறைவேறியது.

## கொழும்புத் தமிழ்க் கழகம்

17-10-43ல் நடைபெற்ற கொழும்பு தமிழ்க்கழகக் கூட்டத்தில் வித்வான் வ. மு. கனகசுந்தரம்பிள்ளை அவர்களைக் கழக வித்வானாக வரவேற்றுக் கழக இல்லத்திலேயே இருந்து கழக நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. வித்வானவர்கள் சங்கநூற் கருத்துக்கள் சம்பந்தமான 6-வது பிரசங்கத்தை நடத்தினார்கள். 'திருமுருகாற்றுப்படை' ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

24-10-43ல் நடந்த கூட்டத்தில் திரு. ஏ. வி. மயில்வாகனம் 'தமிழ் இலக்கியப் பரப்பு' என்ற விஷயம் பற்றிப் பேசினார். தொல்காப்பியர் காலம்பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. மொஹிஞ்சோதாரோ சித்திர லிபிகள் தமிழில் வாசிக்கப்பட்டிருப்பதைப் பலர் ஆதரித்தனர். டாக்டர் கல்லைநாதன் அகத்தியர் எழுதிய நூல்களைப்பற்றி விசாரித்தார்.

நவம்பர் 7ம் தேதி மாலை தமிழ்க் கழக ஆதரவில் 'வானொலி இசை மண்டலத்தார்' ஒரு தமிழ் இசைக் கச்சேரி நடத்துவார்கள் எனக் காரியதரிசி அறிவிக்கிறார். —கடித.

# ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

II

(வெள்ளவத்தை மு. இராமலிங்கம் எழுதுவது)

### பதிவிரதை விலாசம்

இஃது யாழ்ப்பாணம், தெல்லிப்பழையூர் J. W. BARR குமாரகுலசிங்க முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. இந்நாடகாசிரியர் 1827-ம் ஆண்டில் பிறந்து 1883 ம் ஆண்டில் இறந்தவர். இவரது சீவிய சரித்திரத்தை உதயதாரகைப் பத்திராதிபர் ஆணல்ட் சதாசிவம்பிள்ளையவர்கள் தமது பாவலர் சரித்திர தீபகத்தில் வெகு அழகாக எழுதியிருப்பதால் அதனை கண்டெடுத்துக் கூறுதல் மிகையென விடுத்தனம். இந்நாடகம் 1859-ம் ஆண்டு இயற்றப்பெற்றுத் தெல்லிப்பழை, இணுவில், அளவெட்டி ஆதியாம் இடங்களில நடிக்கப்பெற்றது. வட்டுக்கோட்டை உவில்லியம் செவின்ஸ் ஆசிரியர் இந்நாடகத்திற்கு ஒருசாற்றுகவி கொடுத்திருக்கிறார். அதனைக் கீழே காண்க.

ஆசார நதிவனிதை பதிவிரதை
விலாச தமி ழமிழ்த்த மாந்தித்
தேசாரு மிதயகமலங்கண் மாந்
தின்பசுகந் தினைக்கச் செய்தான்
வாசால சித்திரவித்தாரகவி மேக
மதி மந்தாயூகி
யோசிப உவில்லியம் பார்க்குமார
குலசிங்கமுதலிச்சுபோசன்

### அச்சுவாகனமேற்றல்

இந்நாடகாசிரியரின் மகனார் திரு. R. R. B. குமாரகுலசிங்க மணியகாரன் அவர்கள் விருப்பத்திற்கிசைய இந்நாடகம் வயாவிளான் சுதேசநாட்டியப் பத்திராதிபரும் அதிபருமான திரு. க. வேலுப்பிள்ளையவர்களால் ஏட்டுப்பிரதியின் ஈற்றில் சிதைந்துபோன சிறுபாகமும் பாடிச் சேர்க்கப்பட்டு 1908-ம் ஆண்டு சுதேசநாட்டிய அச்சியந்திரசாலையில் அச்சுவாகனமேற்றப்பெற்றது. இந்நாடகத்தினை அச்சேற்றிய காலத்திலேபோதும் உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர், சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர், சென் பத்தரிசியார் கல்லூரி ஆசிரியர் F. J. சுபவாக்கியம்பிள்ளை, வண்ணார்பண்ணை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை முதலியோர் சாற்றுகவிகள் கொடுத்திருக்கிறார்கள். விலைமதித்தற்கரிய இந்நாடகப் பிரதியொன்றினை எமக்குக் கொடுத்துதவிய இந்நாடகாசிரியரின் மகனார் திரு. A. B. குமாரகுலசிங்கப் பெரியார் அவர்களுக்கு எம்நன்றி உரித்தாகுக.

### சரித்திரச் சுருக்கம்

நேபாள தேசத்தில் வித்தியாசம்பன்னன் என்னும் இளைஞனும் பதிவிரதை என்னுமோர் வணிகர்குல இளங்குமாரத்தியும் முன்னவரின் பிதாவும் அருங்கலை விநோதருமாகிய வித்துவாம்சர் என்னும் குருசிரேஷ்டரிடம் கல்வி பயில்கிறார்கள். இவ்விருவரும் பெற்றார் அநுமதியுடன் விவாகஒழுங்கு செய்து ஒருவர்க்கொருவர் வாக்குக் கொடுத்து மாறுச் சகிதராகின்றனர். பிதா, மாதா, பிரியகாதலி இவர்களின் உத்தரவுடனும் பிறதேசம் பார்த்துவரச் செல்லும் வித்தியாசம்பன்னன் அயோத்திமாநகர் வந்து சேர்கிறான். அவன் திறமைகளைக் கண்ட அவ்வூர் அரசன் மநுநீதிசேகரன் அவனை அபிமானிக்கிறான். அரசன்மகள் மனோன்மணியோ அவன்மீது காதல்கொள்கிறாள். தன்காதல் வித்தியாசம்பன்னனால் நிராகரிக்கப்படவே மனோன்மணி குரோதங்கொண்டில்லாதவற்றைத் தகப்பனுக்கு எடுத்துரைக்கிறாள். அவனும்மகளைநம்பி வித்தியாசம்பன்னனைச் சிறைச்சாலைக்கனுப்புகிறான். உண்மையை உணர்ந்தபின் சிறையினின்றும் நீக்கித் தன் மந்திரியாக்கி வைத்திருக்கிறான்.

நேபாள தேசத்து அரசன் விசயரங்கன் வேட்டைக்குப் வருக்போது ஒருநாள் பதிவிரதையைக்கண்டு மனதைப் பறிகொடுத்து அவளைப் பெறுதற்கான முயற்சிகள் செய்கிறான். இவ்வகியாயத்தைத் தாங்கமாட்டாத பதிவிரதை ஒருவரும் அறியாது வீட்டினின்றும் வெளிக்கிளம்பிக் காட்டு மார்க்கமாய் ஒளித்தோடுகிறாள். அரசன் தூதுவர் அவளை ஓர் அடவியிற்கண்டு வலோற்காரமாகப் பிடித்திழுத்துக் கொண்டுபோக முயற்சிக்கின்றனர். இத்தருணத்தில் காட்டில்வேட்டையாடிக்கொண்டுநின்ற கண்ணப்பன் என்னும் வேடன் பதிவிரதையைக் காப்பாற்றித் தன் சொந்தநாடாகிய அயோத்திக்குக் கூட்டிச்சென்று தன் தாயாரிடம் ஒப்படைக்கிறான். பதிவிரதை கடலைக்காரக் கிழவியுடன் சந்தோஷமாகக் காலங்கழிக்கிறாள். இதனையறிந்த வித்தியாசம்பன்னன் பதிவிரதையிருக்குமிடஞ்சென்று அவளை அழைத்து வந்து தன்னுடன் வைத்திருக்கிறான்.

பதிவிரதையை மீட்டவேடன் அயோத்தி வாசியெனத் தூதுவனால் அறிந்த விசயரங்கன் அவனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி மநுநீதி சேகரனுக்கு ஓலைவிடுகிறான். தன்மந்திரி வித்தியாசம்பன்னன் யோசனைப்படி மநுநீதி சேகரன் வேடனை ஒப்புவிக்க மறுக்கிறான். தன் ஓலையை மதிக்கவில்லையென்று மனங்கவன்ற விசயரங்கன் மநுநீதிசேகரன்மேல் படையெடுத்துவந்து பின்னவனின் கைதியாகிறான். மீண்டும் வித்தியாசம்பன்னனின் யோசனைப்படி மநுநீதி சேகரன் தன்மகள் மனோன்மணியை விசயரங்கனுக்கு விவாகம் செய்துவைத்துத் தன் இராச்சியத்தையும் ஒப்படைக்கிறான். விசயரங்கனும் தான் பதிவிரதைக்குச் செய்த பழிக்குப் பதிலாகத் தன் இராச்சியத்தை அவனுக்குக் கையளிக்கிறான். வித்தியாசம்பன்னன் நேபாளத்தையும் விசயரங்கன் அயோத்தியையும் அரசாள்கிறார்கள்,

### ஓர் ருசிகரமான பாகம்

அயோத்திமாநகர் அரண்மனையில் மநுநீதிசேகர மன்னனின் மகள் மனோன்மணி என்பாள் தன்தோழியர் புடைசூழத் தன் அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிறாள். எவர் காதும் செவிடு மண்டத்தக்கதாய் இடிமுழக்கம்போன்ற ஒரு ஓசை கேட்கின்றது. ஓசையின் காரணத்தை வினவுகிறாள் ஆரணங்கு. பாராளும் பார்த்திபரும் எடுத்து வளைப்பதற்கரிதான பாரவில்லை இன்று ஒரு பாலியன் எடுத்து வளைத்து அவன் அம்பெய்து நாணொலியென நங்கையர் கூறுகின்றனர். மனோன்மணி எழுந்து மாளிகைச் சாளரவாசல வழியாக வித்தியாசம்பன்னனின் திருவுருவைப் பார்க்கிறாள். அழகுக்கு உருவடிவமான இத்தப்பாலியனோ அந்தப் பாரிய வில்லை வளைத்தது என்று தனக்குள் சொல்லிக்கொள்கிறாள். அவனைச் சந்திக்க மனம் அவுகிறது. பின்பு இருவரும் சந்திக்கிறார்கள். இவர்களுக்குள் நடந்த தர்க்க சம்பாஷணையை எங்கள் நாடகாசிரியர் பதினான்கு விருத்தங்களாற் றருகின்றார். அவற்றுள் எட்டு விருத்தங்களை எடுத்துக் காட்டாமலிருக்க என்மனம் அவுகில்லை.

மனோன்மணி விருத்தம்

பிரசையாயிருப்போர்க் கென்ன
பிரபல மிருந்தும் வாய்ந்த
அரசர்க் கெல்லத் திபமாதவற்
கொப்போ முந்த
வருமங்கை தன்னைவிட்டு மகிதல
மாளப்பெற்ற
அரிவையை மணம் முடித்தா
லதிர்ஷ்டமாம் ஐயமுண்டோ.

வித்தியா சம்பன்னன் விருத்தம்

ஐயமுண் டென்பதற்கு ஆட்சேபம்
தான்சொல் வானேன்
வையகம் வரினுமென்ன மகிமைகள்
வரினும் அன்றே
ஐயக மொன்றுயுற்ற கோதையை
விட்டு மன்றல்
செய்வது முறையோ ஈதைச்
சிந்தையிற் றேர்ந்திடீரே.

மனோன்மணி விருத்தம்

எட்டாத புட்பமெல்லா மிறைவனுக்
கென்று யாரோ
விட்டவம் முறையின்பற்றி வீண்
பேச்சுச் சொன்னீரையா
அட்டதிக் கும்மதிக்க அரசனு
யிருக்கலேசிற்
கிட்டுமோ கிட்டிலிங்கே கிளத்திய
தடை கொள்வாரோ.

வித்தியா சம்பன்னன் விருத்தம்

பூதலமீ தனேகர் புத்தியில்லார்
பொல்லாங்குக்
கேதலமாக வார்வா ரியற்கையா
விதனைக் கண்டோம்
ஆதலால் நாந்துரோக மது
செய்ய ஞாயமுண்டோ
நீதியை யாய்ந்து செய்ய நினைவதே
சரியாமம்மா.

மனோன்மணி விருத்தம்

பாவமேதுலகையாளும் பார்த்திபன்
மகளாமென்னை
மேவியுன்னிதய மொத்து விளங்கு
நல் விவாகஞ் செய்து
தேவியாய்ப் பெறி லயோத்தி
தேசமு மாகம் பெற்றுப்
தாவுமென் விருப்பம் போலத்
தயவுசெய் தாளுவாயே.

வித்தியாசம்பன்னன் விருத்தம்

மன்னவன் பேறே யிந்தமகிதலம்
போற்றுஞ் செய்ய
அன்னமே நானோர் மங்கைக்கான
கண்ணாளனென்று
முன்னமே சொன்னேனந்த
முறைமையை மனதிலோர்ந்து
இன்ன வாசகத்தை நீக்கியென்னை
யாதரித்திடீர்.

வித்தியாசம்பன்னன் விருத்தம்

கருத்ததனி லிச்சை வைத்த
லதுவும் பாவங்
கருதுமனை வாட்கைதனைக்
கைக்கொள்ளாது
பொருத்தமாய்ச் சேர்ந்தனைத
லதுவும் பாவம்
பொறுகொடியே தேர்ந்திட வோர்
பொழிப்புச் சொல்வேன்
திருத்தமதாய் மங்கையர்கள்
நெறியைக் காக்கச்
செகதலத்தி லாடவர்கள்
செம்மை யுற்றோர்
விரத்துரையாய் ஆடவர்க்கு
மணியென்றேத
வேண்டுமோ மனத்தெரிய
வேண்டி னேனே.

மனோன்மணி விருத்தம்

நாடியிங்குனைத் தொடர்ந்த
நல்லனுபவ மெண்ணாமல்
மோடியா யுரைகள் விண்டு
மோகத்தைத் தீர்த்திலாய்நீ
பேடியா வுலகிலித்தப் பேதைமை
கண்டதில்லை
வாடிநீ மெலியக்காலம் வந்தது
வந்ததப்பா.

### பரந்துகிடக்கும் பழமொழிகள்

அக்காலத்தில் விருத்தங்கள் இயற்றுவோர் ஒவ்வொரு ஆணித்தரமான பழமொழியை ஒரு அடியாக வைத்து இயற்றுவது இயல்பென முந்திய கட்டுரையில் கூறினும். அப்படியான பழமொழிகளை முதலாம் அடியில் வைத்து விருத்தங்கள் இயற்றுவது இந் நாடகாசிரியரின் சிறப்பு விதிடாகும். அப்படியான ஐந்து அடிகளை மட்டும் இதன் கீழ்த் தருதும்,

1. தன்னையே யறிந்தாராதி
தலைவனை யறிவாரென்று
2 எட்டாத புட்பமெல்லா
மிறைவனுக்கென்று யாரோ
3. கல்லுண்டு நக்குத்தட்டிக்
கஷாயங்கொண் டதுபோ
லென்றோர்
4. எருதுக் தன் புண்ணழற்சி
ஏற்ற காகத்திற்குத் தன்
கருதிய பசியழற்சி காணென்
பாருலகினுள்ளோர்
5. தீரமா யெளிதின்வந்த சீதேவி
தன்னைக் காலால்
தூரமேதள்ளலாமோ துரையே
யென் ப்ராணநாதா.

### மறு விசேஷங்கள்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற் கிணங்க இந்நாடகாசிரியர் தாம் வட்டுக்கோட்டைச் செமினரியிற் கற்றுத் தெரிந்த பூதக் கண்ணாடியின் தாற்பரியத்தை ஓர் விருத்தத்தில் வெகு அழகாக அமைத்திருப்பதைக் கீழே காண்க.

பூதக்கண்ணாடிக் கூடாய்ப்பொருந்து
தண்ணீரைப் பார்க்கத்
தீ முறு கிருமிபோன்று தோன்று
மங்கதனு லந்தைப்
பேதித்துத் தள்ளிற் சீவன்பிரியுஞ்
சின்னாளில் நீயும்
சாதித்த நெறியுமஃதே சன்மார்க்கக்
கொழுந்தே ஆகா.


## தேவை

Kandermadam-Thirunelvely
Co operative Stores
Society Ltd.

கந்தர்மடம் திருநெல்வேலி ஐக்கிய பண்டக சாலைக்கு மானேஜர் ஒருவர் தேவை. வியாபார அநுபவமும் கணக்கு வல்லபமும் ஆங்கில அறிவும் விசேடமாகக் கவனிக்கப்படும். ரொக்கப் பிணை ரூபா 500 00 சம்பளம் ரூபா 40 நன்னடத்தைப் பத்திரங்களுடன் விண்ணப்பத்தில் தம்முடைய வயதையும் குறிக்க வேண்டும். விரும்புவோர் நவம்பர் மாதம் 15-ந் திகதிக்குமுன் விண்ணப்பஞ் செய்க. பிந்திய விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

V. Rajaratnam,
Secretary,
Parameshwara College Road,
Thirunelvely, Jaffna.
(Mis. 145. 1-11-43)

## தேவை

தமிழ் உபாத்திமைப் பத்திரம் (ஸேர்டிவிக்கற்) பெற்ற அல்லது எஸ். எஸ். ஸி. வகுப்பிற் சித்திபடைந்த ஒரு பெண் உபாத்தியாயர் தேவை. விரும்புவோர் நவம்பர் மாசம் 5-ந் தேதிக்குமுன் தங்கள் திறமையோடும் நற்சாட்சிப் பத்திரத்தோடும் எமக்குவிண்ணப்பஞ்செய்க.

தி. தம்பையா,
மனேஜர்.
கட்டுடைச் சைவ வித்தியாசாலை,
மானிப்பாய்.
Mis. 144. 25-10 & 1.11.43.)

# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.
(Mis. 98. 5-8—31.12.43)

## கந்தசட்டி விரதம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரம் 420—451) மிகச் சிறந்தது. இப்பாகத்திலடங்கிய 32 திருப்பாசுரங்களைச் சுப்பிரமணிய பக்தர்கள் தொன்று தொட்டு தினந்தோறும் நியமமாகப் பாராயணம் செய்துவருகின்றார்கள். இப்படலம் முழுவதற்கும் யாழ்ப்பாணம் மேலைப்புலோலி ஆசிரியர் ஸ்ரீமத் வே. சிதம்பரப்பிள்ளையவர்கள் இனியதோர் தெளிபொருள் விளக்க விரிவுரை செய்திருக்கின்றார்கள். இதனை ஒவ்வொருவரும் வாங்கிப்படித்து இன்புற்றுப் பெரும்பய னெய்தலாம். இவ்வுரையாசிரியர் தமது முன்னுரையில் எழுதிய ஒரு சிலவற்றை இங்கு தருவாம்.

"யான் எனது வணக்கங்களை இடைக்காலத்து இழந்தமை, இடம் பொருளேவல் சிறிதளவு மின்மை, ஆதாரின்மை, சுதந்தர சீவியமாதிய சில உயர்குண உறைப்பு, காலதேசப்போக்கின் கடுமையால் வலிந்து சேரிடும் பலவகைத் தாக்குகள் ஆதிய வற்றால் வருந்தி வசிக்கும் நிலைமையை யுடையேன். இந்நிலையில் இவ்வுரையை எழுதமுயன்றேன். எழுத்து வேலைக்குப் பின் அளைகப்படா. அவர்க்குக் கொடுக்கப் பொருள் கிடையாது...... இவ்வனம் பேரிடருள் அகப்பட்டு எழுதி........" இதை வாசிக்கும்போது எந்த மனமும் நீராய் உருகும். இதிலிருந்து இப் பெரியார்க்கு இப்புராணத்திலுள்ள பற்று எத்தன்மையதென்று தெரிகின்றது.

தென்னிந்தியாவிலே பல ஆண்டுகளாகச் சொற்பொழிவாற்றிவந்தவரும், சிறந்த முருகன உபாசகரும் திருக்கோவலூராதீன மடாலயத்தின் தலைவருமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் இரு ஆண்டுகளுக்குமுன் செய்த கந்தசஷ்டிச் சொற்பொழிவுகள் நூல்வடிவில் வந்திருக்கின்றன. அதனை வாசித்தால் அனேக நுட்பமான கருத்துகள் விளங்கும். கந்தபுராணமென்னும் நூலானது அறுமுகப்பெருமான் சிவபரம்பொருளின் வேறல்லரென்பதைத் தெளிவாக விளக்கி எடுத்துக்காட்டுகின்றது. சிவபிரானே 'அறிஞரயோர் சிந்திக்கும் தனது தொலைவில்லாத திருமுகம் ஆறும்கொண்டான்' என்று அப்புராணம் நவிலுகின்றது.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய."

திருமுருகாற்றுப்படை யென்னும் பாராயண நூலானது பதினோராந் திருமுறையிலுள்ளது. சிவபூசையிற் றவறிய ஆயிரவரை ஒரு பூதம் மலைமுழைஞ்சில் அடைத்து வைத்துவிட்டு அவர்களை உண்ணுவதற்கு நாடப்போயிற்று. அப்பொழுது இவ்விடரை நீக்குடபொருட்டு முருகப்பெருமானை வேண்டி நக்கீரர் இப்பிரபந்தத்தைப் பாடினார். முருகப்பெருமான இப்பாட்டிற்கு உவந்து அப்பூதத்தைக் கொன்று நக்கீரருள்ளிட்ட அனைவரையும் காத்தருளினர். இந்நூல் 317 அடிகளை யுடையது. குகனடியவர்கள் இதனை மனனஞ்செய்து நாடோறும் பாராயணஞ்செய்து வருவார்கள். இப்பாட்டை ஸ்ரீலஸ்ரீ ஞானியடிகள் கந்தஷஷ்டி நாட்களில் ஒவ்வொருநாளும் 36 முறை பாராயணஞ் செய்கிறவர்களெனச் சில நாட்களுக்கு முன இலங்கைக்கு விஜயஞ்செய்த ஞானியார் சுவாமிகளின் மாணவர்களிலொருவராகிய க. வச்சிரவேல் முதலியார் B. A. L. T அவர்கள் எமக்குக் கூறினார்கள்.

யாழ்ப்பாணத்திலும் தென்னிந்தியாவிலும் சைவத்தையும் தமிழையும் ஒருங்கு வளர்த்த வள்ளலும், புறச்சமய இருளானது எமது யாழ்ப்பாணத்தை மூடா வண்ணம் இரட்சித்த புண்ணிய சீலரும், சமயத்திற்காகத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகஞ் செய்த ஆறுமுகநாவலர் பெருமானும் இந்நூலை நியமமாகப் பாராயணஞ் செய்தவர்கள். இதனைப் புறத்துய்மை அகத்துய்மை பேணிச் சிறந்தழுதிருந்து முருகக்கடவுளைச் சித்தாசனத்திலேற்றி அப்பிரான் திருவடிக்கண் பிரிவறப் பொருந்திய சித்தத்தோடு நித்தலும் பாராயணஞ் செய்வார், பகையும் பிணியும் மிடியும் பாற்றலும் கொழிந்து, இம்மைப்புலமை வளமுறக் கெழுமலும், பாசவைராக்கியம் பகவானுஞானம் மாசறப் பெறுதலும், அம்முருகக்கடவுள் மலரடிக்கீழ்ப் பரமானந்த வாழ்வு தலைக் கூடுதலும் ஒருதலையாக எய்துவர். ஸ்ரீ முருகப்பெருமானிடத்தில் பேரன்புபூண்ட சில அடியவர்கள் நக்கீரரையும் திருமுருகாற்றுப்படையையும் பாராட்டிக் கூறிய சிலவற்றை இங்கு தருவாம்.

திருப்புகழமுதத்தை எமக்கீந்தருளிய அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானே நக்கீரருக்கு 'உலக முவப்ப' என்று அடிபெடுத்துக் கொடுத்ததாகத் திருப்புகழில் கூறுகின்றார்.

"வளவாய்மை சொற்பிரபந்த முளகீரனுக்குகந்தன்
மலர்வாயிலக் கணங்கள்—இயல்போதி
அடிமோனை சொற்கிலங்க உலகா முவப்ப என்றும்
அருளாலளித் துகந்த பெரியோனே"

அந்தாதியில் 'நக்கீரர் சொற்றித்தித்ததே' எனவும் அருளியிருத்தலை நோக்குவோமாக. இதற்கு உரை வகுத்த வில்லிபுத்தூராழ்வார் தெய்வயானையம்மையாரின் இன்பானுபவத்திலும் பார்க்க நக்கீரர் பாடல் முருகனுக்கு இனிமையாயிருந்ததென்று உரைக்கின்றார். திருமுருகாற்றுப்படையின் பெருமை திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் திருவாரிஞ்சைமுருகன் பிள்ளைத்தமிழ் செய்யூர்ப்பிள்ளைத்தமிழ் திருப்போரூர்ச் சந்நிதிமுறை கந்தப்பதேசிகர் தணிகைச் சந்நிதிமுறை முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. விரிவஞ்சி விடுக்குதும்.

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தின்மதியில்

"பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த ஐயற் கெனதுசிறுசொல்லு மொட்பாகு மிப்பார்"

என்று குறித்திருத்தலை யாமெல்லோரும் கருத்திற் பதித்து உன்னிட வுன்னியாங்கிங் குதவுவதாகிய திருமுருகாற்றுப்படையைத் திரிகரண சுத்தியுடன் ஓதி உய்யும் வழியைக் கடைப்பிடிப்போமாக.

வட்டுக்கோட்டையில் 1849 முதல் 1929 வரை திகழ்ந்தவரும் சிறந்த சிவப்பிராமண குலத்தவரும் செந்தமிழ் ஆங்கில வடமொழி விற்பன்னருமாகிய சிவசுப்பிரமணிய சிவாசாரியார் அவர்கள் கந்தசட்டிப் புராணம் என்னும் நூலொன்று 1009 விருத்தப் பாவால் இயற்றியிருக்கின்றார்கள். இதற்கு மு. சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் முதலிய அறிஞர்கள் சிறந்த சாற்றுகவிகள் கொடுத்திருக்கின்றார்கள்.

இத்தினங்களில முருகப்பெருமானைத் திருச்செந்தூர்திருப்பரங்குன்றம் பழநி திருவேரகம் குன்றுதோருடல் (மலைகளிலுள்ள ஸ்தலங்கள்) பழமுதிர்சோலை முதலிய ஸ்தலங்களில் சென்று வழிபடல் வேண்டும். வசதியில்லாதவர்கள் தங்கள் கிராமங்களிலுள்ள சுப்பிரமணியர் கோயில்சென்று "ஆறுதிருப்பதிகண்டாறெழுத்து மன்பினுடன் கூறுமவர் சிந்தைக் கொண்ட குமரவேளை" நெஞ்சமுருகி வழிபடல் வேண்டும்.

"ஐயந்தார் மறைகளாலும் அறித்திடற்(கு) அரிய செவ்வேள்
செய்யபேர் அடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க வன்றுன்
பொய்யில சீரடியார் வாழ்க வாழ்க இப்புவனம் எல்லாம்."

முருகன் திருவடிகளே சரணம்

## பழமை

திருமயிலை, திருவாளர்:
சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை,

(முற்றொடர்)

நமது பாரம்பரியங்களின் கண்ணே காலகதியால் பல கலப்புகள் செறிந்திருத்தல் சகசம். அது கொண்டு யாம் பழமையை உதறிவிடுதல் நேர்மையன்று. நமது களஞ்சியத்திலுள்ள தானியக் குவியலுட் பதரும் வந்து சேர்ந்தமை பற்றி யாம் அக் குவியலைக் கொளுத்திவிடுவது முறைமையன்று. நமது தேகத்திலே நோய் உண்டாயினமையால் அதனை நாசஞ் செய்வது மடமையின்பாற்படும். அது போலவே நமது பெருநிதிக் குவியலாகிய பாரம்பரியத்தின்கண் விருத்திக்குத் தடையாகிய சில கறைகள் வந்து சேர்ந்தன என்னும் சந்தேகம்பற்றி அப் பாரம்பரியத்தை யாம் ஒருங்கே புறந்தருவது நமது விருத்திக்குரிய வழியாகமாட்டாது. பாரம்பரியத்தை யாம் செவ்வையாக ஆராய்ந்து சீர்தூக்கி அதனிடத்து நமது விருத்திக்குத் தடையாக ஏதேனும் உளதாயின் அதனை நீக்குதலே முறைமையாம். அப்படி இல்லாதவிடத்து யாம் அதனைச் சிறிதேனும் அலட்சியம் செய்வது நமது விருத்திக்குத் தடையாகும்.

இனி, இப் பாரம்பரியங்கள் இந்தக் காலத்துக்குத் தகுந்தன வல்ல ஆதலால் அவற்றை நீக்க வேண்டுமென்பது சிலர் கருத்து. நமது பாரம்பரியம் இந்தக் காலத்துக்கு ஏற்றதன்று என்பது நமது மயக்கமாத்திரையேயன்றி உண்மையன்று. நாம் மேலைத் தேசத்தாரோடு பழகிய பழக்கத்தாலும், மேலைத்தேச ஆசாரங்களில் மோகமுற்று நிற்றலினாலும் அது இந்தக் காலத்திற்குத் தக்கதன்றென யாம் கொள்ளுவதன்றி உண்மையென்று கொள்ளத் தக்கதன்று. இந்தியராகிய யாம் இந்திய சாதியினராக விருத்தியுற வேண்டுவதன்றி, மேலைத் தேச வேடம்பூண்டு விருத்தியுற வேண்டுமென்பது சிறிதும் பேதப்படமாட்டாது. இந்திய சாதியாராக நாம் விருத்தியுறுதற் கெல்லாம் இந்திய ஆசாரமே அனுட்டிக்கப்படவேண்டியது. இந்திய ஆசாரத்திற்கு ஆதாரமாயுள்ளது இந்திய பாரம்பரியமேயாம். அந்தப் பாரம்பரியத்தை நீக்கி நாம் விருத்திபெற முயலுவது நமது பிராந்தியேயன்றிப் பிறிதன்றாம். அங்ஙனமாயினும் நமது பாரம்பரியம் இந்தக் காலத்திற்குத் தக்கதன்றென நாம் பூரணமாக விசாரித்து அறிந்து அதனைக்கைவிடுவதுண்டாயின், ஏற்புடைத்தாம். அத்தகைய விசாரணை சிறிதுமின்றி மேலைத்தேச சம்பந்தங் காரணமாக நம்மிடத்திலேற்பட்ட சுயாபிமான துவேஷத்தை யாம் போற்றுவது முறையன்று.

இந்தத் துவேஷம் காரணமாக யாம் நமது பாரம்பரியத்திற் சந்தேகமுறுவது நமது விருத்திக்குப் பாதகமாகும். இந்தப் பாரம்பரியத்தில் யாம் சந்தேகிப்பதெல்லாம் இயற்கை முறைக்கு விருத்தமானதோர் மாயாசலின், இவ்வியற்கை முறையின் மாறுகொண்டு யாம் விருத்திபெறுவது சிறிதும் கூடாதென்க. இந்தப் பாரம்பரியத்தின் மேன்மை கருதியே நமது தேசத்தில் குருபக்தி, பெரியோர்க்குப் பணிவு, பெற்றோரைப் பேணல் முதலிய சீலங்கள் அமைந்துள்ளன. இச்சீலங்களை யெல்லாம் மேலைத் தேசத்தார் சிறிதும் பொருட்படுத்தாமை பற்றியே அவர்களிடத்திலே சாதுசங்கமும், சமய பக்தியும், சன்மார்க்க விருத்தியும் பெரிதும் குறைவு பட்டுக் கிடக்கின்றன. இந்த ஒழுக்கத்தை யாமும் பின்பற்றுவதுண்டாயின் யாம் சிறிதும் விருத்தி பெறமாட்டோம். மேலைத் தேசத்தவர் ஆன்ம ஞானத்திலே அதிகம் குறைவுற்றுக் கிடத்தலினால் அவர்கள் இச்சீலங்களை அனுஷ்டியாமலும் விருத்தி பெறக்கூடும். ஆன்ம ஞானப்படியிலே யாவரினும் மேலான நிலையிலுள்ள இந்தியர் இச்சீலங்களை அலட்சியஞ் செய்து விருத்தியடைவது கூடாதகாரியம். சேற்றைப் புசித்து மற்சங்கள் விருத்தியுறும். பறவைகள் அங்ஙனம் விருத்தி பெறுவது முடியாது.

இந்தியர் தமது ஆசாரப்படி மூத்தோர், முதியவர், ஆப்தர் என்றிவர்களை அனுசந்தானஞ் செய்து பாரம்பரியங்களைப் பிழையுடையனவென்று கண்டாலன்றி எடுத்தாண்டு வருவதே நேர்மையாகும். இக்கிரமத்தைக் கடந்து விருத்திபெறக் கருதுவது புத்தியன்று.

## மிஸ்றர். ரம்புக்பொத்த காலமானார்

அரசாங்கசபையின்
பிபிலிப் பிரதிநிதி

பதுளை, அக், 27—அரசாங்கசபையின் பிபிலிப் பிரதிநிதியான மிஸ்றர். ஜி. லி. ரம்புக்பொத்த இன்று அவரது 59வது வயதில் மரணமானார்.

காலஞ்சென்ற மிஸ்றர். ரம்புக்பொத்த பதுளையில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தி வந்தார். இவர் 1931ம் ஆண்டில் முதலாவது அரசாங்கசபையிற் பிரவேசித்து 1936ம் ஆண்டிற் பொதுத்தேர்தலிற் போட்டியிட்டு மீண்டும் வெற்றிபெற்றார். இவர் சுகாதார நிர்வாகசபையில் ஓர் அங்கத்தவராக இருந்தார்.

1940 ஆண்டு செப்டம்பர்மாசத்திலிருந்து இவர் நோய் காரணமாகப் படுக்கையிலேயே இருக்க வேண்டியதாயும் அதனால் அரசாங்கசபைக்கூட்டங்களுக்குச் செல்வதும் அரிதாயிற்று. அவருக்கு அரசாங்கசபை பலமுறைகளில் 'லீவு' அநுமதித்திருக்கிறது.

இவர் ஊவா பௌத்த ஆலயபரிபாலன நிர்வாகசபையின் பழைய தலைவராவார். விவசாய சமூகவேலைகளில் இவருக்கு ஆர்வம் அதிகம்.

---

அரசினர் தமிழ் ஆசிரிய கலாசாலை,
அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு.

மேற்கூறிய கலாசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் 10.11.43 வரைக்கும் ஏற்கப்படும். இன்னும் தேவையான விபரங்களுக்கு 29.10.43-ம் திகதியைய கொண்ட அரசினர் கெசற் பத்திரிகையைப் பார்க்க.

வித்தியாலந் தோர், எச். எஸ். பெரேரா,
கொழும்பு, வித்தியாதிபதி.
1943-ம் ஒக்டோபர் 25-ந்
[G. 28. 1-11-43.]

## விளம்பரம்

கொக்குவில் கிழக்கு மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையாரும் மற்றும் எவரவருமாகிய இதன்கீழ்க்கை யொப்பமிட்டிருக்கும் நாங்கள் 1943-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3-ம் திகதி புதன்கிழமை மாலை 4-30 மணியளவில் மேற்படி ஆலய மண்டபத்தில் மேற்படி ஆலயத்தைப் பரிபாலித்தற்காக பிறஸ்ரிகளையும் ஒரு நிர்வாகசபையையும் தெரிவதற்கு ஓர் மகாசபைகூட்ட நிச்சயித்திருப்பதால் அத்தருணம் மேற்படி ஆலய வழிபாடுடையோர் யாவரையும் தவருது சமுகமளிக்கும்படி வேண்டுகின்ரேம்.

சி. அருளம்பலம், அ. வயித்திலிங்கம், வ. கந்தையா, அ. ஐயாத்துரை, சி. ஐயாத்துரை, க. இராசையா, A. Nagalingam, செ. அப்புத்துரை, வ. செல்வத்துரை, பொ. கந்தையா, சு. கன்னித்தம்பி, அ. திருநாவுக்கரசு, த. தம்பிமுத்து, செ. பேரம்பலம், க. கந்தையா, க. இராசையா, கா. பாலசிங்கம், சி. சுப்பிரமணியம், சி. நல்லதம்பி, சு. அழகரத்தினம், ஆ. சுப்பிரமணியம், க. சுப்பிரமணியம், த. பஞ்சலிங்கம், மா. சண்முகம், வே. கந்தையா, செ. கந்தையா, பொ. இரத்தினம், அ. கந்தையா, க. செல்வரத்தினம், வே. சிவஞானம், சி. சபாரெத்தினம், சி. நடராசா, வீ. பெரியதம்பி, சி. முத்துவேலு, இ. சி. சி. சின்னத்துரை, சி. கந்தையா, மூ. மதியாபரணம், சு. செல்லத்துரை, கா. இராமுப்பிள்ளை, ஆ. கந்தையா, சீ. செல்லத்துரை, கா. சின்னையா, வே. பொன்னையா, க. பொன்னுத்துரை, க. செல்லத்துரை, V. Chelliah, செ. இராசையா, ஆ. கந்தையா, க. நடராசா, மு. பொன்னையா, க. செல்வராசா, மு. செ. இராசசுந்தரம், மு. செல்லையா, கா. தம்பு, ஆ. விசயரத்தினம், த. காசிலிங்கம், வே. வல்லிபுரம், மு. நடராசா, வே. கந்தையா, த. தாமோதரம்பிள்ளை, த. வேலாயுதபிள்ளை, செ. வயித்திலிங்கம், P. N. Ratnam, செ. சின்னத்தம்பி, வே. சின்னத்தம்பி, பொ. வேலாயுதபிள்ளை, கா. விநாசித்தம்பி, வ. சின்னத்துரை, சு. சின்னத்துரை, வே. சிவப்பிரகாசம், ம. நடராசா, வே. தம்பிமுத்து, சி. சின்னையா, மூ. சிவசிதம்பரம், கா. ச. இராசலிங்கம், சி. இராசையா, மு. ச. சின்னத்துரை, அ. சீனிவாசகம், க. பொன்னையா, S. P. Raja, க. இராசையா, செ. பொன்னையா, சி. பொன்னுத்துரை, தா. கந்தையா, சி. பொன்னுத்துரை, அ. செல்லையா, கா. முருகேசு, சி. மார்க்கண்டு, அ. சுப்பிரமணியம், வ. நாகலிங்கம், சி. கந்தையா, த. ஆசைப்பிள்ளை, V. Thurairajah, க. சண்முகம், சி. வேலாயுதபிள்ளை, கா. கந்தையா, க. நல்லையா, ச. சின்னத்தம்பி, சி. நாகராசா, தா. க. சின்னத்துரை, ச. நல்லையா, ச. சுப்பிரமணியம், S. Ponniah, ச. மயில்வாகனம், ப. சின்னப்பு, T. Ponnampalam, செ. இராசையா, க செல்லத்துரை, த. இராசரத்தினம், சு. சின்னையா, ச. பொன்னையா, சு. ஐயாத்துரை, T. S. நடராசசர்மா, அ. யோகராசா, க. தருமலிங்கம், க. செல்லத்துரை, பொ. அப்பையா, ஆ. ஞானசேகரம், சி. முருகையா, M. S. MuttukumaraSwamy, வே. சின்னத்துரை, சி. செல்லத்துரை, P. Thiga-rajah, க. செல்லர், த. சின்னத்துரை, ஆ. தம்பிப்பிள்ளை, மா. வல்லிபுரம், மு. இராசையா, தா. மயில்வாகனம், ப. குமாரவேலு, க. சண்முகம், க. துரையப்பா, த. ச. இராசநாயகம், சி. க. சுப்பையாபிள்ளை, அ. நாகலிங்கம், க. இராமலிங்கம், அ. நமசிவாயம், ச. சின்னத்துரை, சி. க. சிவகுருநாதன், சி. இராசா, A. Nagaratnam, சி. தம்பையா, சு. இராசையா, கா. நாகலிங்கம், ஆ. க. சுந்தரம், சி. நவரத்தினம், மூ. இராசரத்தினம், இ. சின்னத்தம்பி, சு. சிவப்பிரகாசம், தா. ஆறுமுகம், இ. அப்புத்துரை, சீ. கனகசபாபதி, சு. சோமசுந்தரம், சி. சுப்பையா, சி. பொன்னையா, வே. தம்பு, அ. செல்லையா, இ. இராசரத்தினம், R. Seeva-Ratnam, ச. கந்தையா, த. கார்த்திகேசு, சா. இ. மன்னனம், தா. அப்பாத்துரை, சு. சாமிநாதன், இ. முத்தையா, சு. இரத்தினம், தா. கந்தையா, க. சண்முகம், அ. கந்தசாமி, வ. அன்னலிங்கம், கா. கந்தையா, V. Sivaguru, வ. வல்லிபுரம், அ. மகாதேவன், சி. சபாபதிப்பிள்ளை, சு. செல்வத்துரை, வ. நடராசா, ச. நடராசா, கா. வயித்திலிங்கம், கா. செல்லையா, க. க. சின்னையா, வ. அருணாசலம், செ. பொன்னுத்துரை, வி. கனகரத்தினம், வை. சுப்பிரமணியம், சி. சதாசிவம், வி. கனகரத்தினம், மூ. செல்லையா, சே. சந்திரசேகரம், வ. ஐயாத்துரை, க. சோமசுந்தரம், வ. முத்துத்தம்பி, ஆ. தம்பிமுத்து, V. Somasundram, வே. செல்லையா, இ. ஆறுமுகம்.

Mis 143—1-11—43

## பருத்தித்துறைப் பகுதி யுத்தகாலப்பணச்சேமிப்பு வாரம்

வடமராட்சிப் பகுதி D. R. O. திரு. A. பெருமையினர் அவர்களதும், யுத்தகாலப் பணச் சேமிப்பு இயக்கக் காரியதரிசி திரு. P. நடேசன் அவர்களதும் முயற்சியினல் இம்மாதம் 21ந் திகதி பிற்பகல் 5 மணிக்குப்பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் வடமாகாண அதிபர் திரு. R. M. டேவிஸ் C. C. S. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர்பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

அத்தருணம் தலைவர் திரு. R. M. டேவிஸ் அவர்கள் தமது தலைமைப் பேருரையில்தற்போது சனங்களுள் அதிகமாக வைசாடும் பணம் கள்ளச் சந்தைகளில உபயோகித்தலினலும் சிக்கனமற்ற செலவுகளைச் செய்தலினலும் ஆடம்பரமான சீவியம் செய்தலினலும் வீணக்கப்படுகிறதென்றும் சேமிப்புப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுவதினல் மேற்கூறிய தீமைகள் ஒழிவதுடன் நமது நாட்டை யுத்தக் கொடுமையிலிருந்தும் நீக்கி மேது பணத்தை லாபத்தோடு பெற்றுக் கொள்ளும் வசதி உண்டாகுமென்றும் கூறி ஒவ்வொருவரும் இந்த யுத்தச் சேமிப்புஇயக்கத்தற் சேரவேண்டிய அவசியத்தை மிகவுந் தெளிவாக விளக்கிக் காட்டினர்கள்.

அடுத்த பேசசாளராகப் பருத்தித்துறை நீதிபதி திரு. J. E. A. அலெஸ் அவர்கள் யுத்தத்தின் ஆபத்தைக் குறைதல் விசேஷமாக நாம் இவ்வியக்கத்திற் சேர்வதிற்ருன் தங்கியிருக்கிறதென்றும், எவ் விஷயத்திலும் வழிகாட்டிகளாக இருக்கிற வடமராட்சி வாசிகள் இதிலும் வழிகாட்டிகளாகவே இருப்பார்களென்றும் கூறி முடித்தார்.

அதன்பின்பு திருவாளர்கள்: R. W. M. உவால்றன் ஆசிரியர் அவர்கள், N. சிவஞானசுந்தரம் அட்வக்கேற் அவர்கள், Dr C. சபாபதியவர்கள் மேற்பட்ட விஷயத்தில விரிவுரை நிகழ்த்தினர்கள். காரியதரிசி திரு. P. நடேசன் அவர்கள் தலைமை வகித்த மாகாண அதிபர் அவர்கட்கும் மற்றும் பேச்சாளருக்கும் நன்றி கூறினர்.

கடைசியாக யுத்தகாலப் பணச் சேமிப்பு இயக்கம்சம்பந்தமாகபாடசாலை மாணவர்களால் சில நடித்தல்கள் நடாத்துவிக்கப் பட்டன. அத்துடன் கூட்டம் முடிவெய்தியது.

—கடிதம்.

## வங்காள மத்திய நிவாரண நிதி

வங்காள மத்திய நிவாரண நிதிக்கு நன்கொடையளித்தவர்களின் 12-வது நாமாவளி இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. அதன்படி இதுவரை இந்நிதிக்கு ரூபாய் 2,92,037 சதம் 97 வசூலாகியிருப்பதாகத் தெரிகிறது.

## வண்ணார்பண்ணை விவேகானந்த வித்தியாலயம்

ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளையாரால் நடத்திவரும் வண்ணார்பண்ணை விவேகானந்த வித்தியாலயக் கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கற்கள் சென்ற திங்கட்கிழமை இரவு சுபமுகூர்த்தத்தில் ஷெ மிஷன் வித்தியாசாலைகளின் ஜெனரல் மனேஜர் உயர்திரு. சுவாமி நித்தாஜானந்தாவாலும் ஷெ வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியசங்கத் தலைவர் வழக்கறிஞர் திரு. M. R காராளசிங்கம் அவர்களாலும் இடப்பெற்றன. சுவாமிகளும் திரு. காராளசிங்கமும் அவ்வமயம் சமுகமளித்த பெற்றோர்களையும் நண்பர்களையும் தங்களாலியன்ற உதவிபுரிந்து சங்கத்தார் எடுத்துக்கொண்ட இப்பெருமுயற்சியை ஊக்கப்படுத்தும்படி கேட்டுக்கொண்டனர். இற்றில் சங்கக்காரியதரிசியும் வித்தியாலயத் தலைமை ஆசிரியருமான திரு. வே. சுப்பிரமணியம் நன்றி கூறினர்.

—கடிதம்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



# அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாசம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சுக்குனுதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)



குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42—3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 1st November, 1943.